பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 228
வியாழக்கிழமை
11 ஜூலை 2024
ஆனி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"ஆயிரம் பொய்கள் மறைச்சாலும் ஆதவன் மறைவதில்லை கண்டியளோ"

## தெல்லிப்பழை சிறுவர், மகளிர் இல்ல விவகாரம்;


# குறைபாடுகளை நிவர்த்திக்குக ஆளுநர் நேற்று அதிரடி உத்தரவு

## உதயனின் செய்தி மீளவும் உறுதிசெய்யப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழையில் இயங்கும் மகளிர் இல்லம் மற்றும் சிறுவர் இல்லம் தொடர்பில், ஆளுநரின் அபயம் குழுவினருக்கு அண்மையில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் குறைபாடுகள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றை நிவர்த்திக்குமாறு ஆளுநர் நேற்று உத்தரவிட்டுள்ளார்.


11



NORTHERN PROVINCIAL COUNCIL

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பணிப்புரை

ஆளுநரின் உத்தரவை வெளிப்படுத்தும் 4ஆம் திகதிய மாகாண இணையத்தளச் செய்தி.



Hon.Governor Media(Nort...

Wed, 3 Jul

~HON.GOVERNOR... +94 70 233 3222

----News UPDATE----

6:34PM

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை முடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பணிப்புரை.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில், கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, இரண்டு இல்லங்களையும் உடனடியாக முடுமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மகளிர் இல்லம் ஒன்றில்

Only admins can send messages

ஆளுநரின் உத்தரவை வெளிப்படுத்திய 3ஆம் திகதிய ஆளுநர் அலுவலக வாட்ஸ்அப் குழுச்செய்தி.

## தமிழரசுக் கட்சியின்

# நாடாளுமன்றக் குழுத்தலைமைக்கு இணக்கத்தின் அடிப்படையில் முடிவு

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகச் செயற்படுவதற்குச் செல்வம் அடைக்கலநாதன் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ள நிலையில், இதுதொடர்பாக இணக்கத்தின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும் எனத் தாம் ஆலோசனை

11

## ஜனாதிபதித் தேர்தல்

# நாடாளுமன்றில் இன்று விவாதம்

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்

11

## பூநகரி - கௌதாரிமுனை

# வீதியை மூடிய மணலால் போக்குவரத்துத் தடை!

### உடன் அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கிளிநொச்சி, பூநகரி - கௌதாரிமுனைப் பகுதிக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. போக்குவரத்தைச் சீர்செய்ய மாவட்ட செயலகமோ, தொடர்புடைய அரச அலுவலகங்களோ அக்கறையற்றிருப்பதாகவும் பொது அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன.

கௌதாரிமுனைப்பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியில் புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் சோழர்கால சிவன் ஆலயத்துக்கு அருகாக, வீதியை மூடி பெருமளவு மணல் குவிந்தமையால் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் நோயாளிகளெனப் பலரும் அன்றாடம்

11

# அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 11

லங்கா சதொச நிறுவனம் நேற்றுப் புதன்கிழமை முதல் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ உருளைக் கிழங்கு 205 ரூபா

11

# மேலும் 5 ஆண்டுகளை ரணிலுக்கு வழங்கவும்!

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

நாட்டை மீட்டெடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசேவையை சீராக்க வருகின்றது புதிய சட்டம்



## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 11**

**மக்களுக்கு மிக அத்தியாவசியமான சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சேவைகளில், இடையூறு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நியாயமற்ற கோரிக்கைகள், வேலைநிறுத்தங்கள் உட்பட இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகளால், மாணவர்கள், இலட்சக்கணக்கான நோயாளர்கள் மற்றும் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்புக் கருதி அதனைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்கமைய அரசாங்கம் புதிய சட்டத்தை கொண்டு வரவுள்ளது.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வரி செலுத்துவோரின் பணத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த அழுத்தத்துக்கு உள்ளான மக்கள் மீதான வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முயலாது. சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள் எதுவும் இல்லை - என்றார். (ச-இ)

## 2 மில்லியன் 'சிம்'கள் பதிவின்றிப் பாவனை

### தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 11

சுமார் இரண்டு மில்லியன் சிம் அட்டைகள் முறையான அடையாளங்கள் இன்றி பாவனையில் உள்ளன. இதனால் சில குற்றச்சம்பவங்களைக் கண்டறிவதில் பிரச்சினை எழுகிறது என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிம் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் போது அடையாள அட்டைகள் கோரப்படவில்லை.

புதிய சட்டத்தின்படி சிம் அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு அடையாள அட்டை கட்டாயமாக சமர்ப்பிக்கவேண்டும்.

அதனடிப்படையில், 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் முறையான அடையாளங்கள் இன்றி பெறப்பட்ட சுமார் இரண்டு மில்லியன் சிம் அட்டைகள் தற்போது பாவனையில் உள்ளன. இது சில குற்றச் சம்பவங்களைக் கண்டுபிடிப்பதில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



## கட்டுநாயக்க அபிவிருத்தி ஜப்பான் விசேட கடன்

கொழும்பு, ஜூலை 11

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிக்க ஜப்பான் இணங்கியுள்ளது.

சலுகைக் கடனுதவியின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையால் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2022 இல் இலங்கையின் கடன் மறு சீர மைப்பு இறுதிசெய்யப்படும் வரை இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (ச)

## ரூ.90 லட்சம் செலவில் போலிக்கடவுச்சீட்டு!

### மாட்டினார் யாழ்.வாசி

கொழும்பு, ஜூலை 11

மலேசிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஆஸ்திரியாவின் வியன்னாவுக்குச் செல்ல முயன்ற ஒருவர் குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தியன் எயார்லைன்ஸ் மூலம் இந்தியாவின் புதுடில்லி சென்று அங்கிருந்து ஆஸ்திரியாவின் வியன்னாவுக்குச் செல்ல அவர் முயன்றுள்ளதாகவும் தரகர் ஒருவருக்கு 90 இலட்சம் ரூபாவை வழங்கி போலிக்கடவுச் சீட்டைத்தயாரித்துள்ளதாகவும் இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச)

## மொட்டின் நிலைப்பாடு 25 இல் வெளிப்பாடு

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ச வால் அன்றையதினம் விசேட உரை நிகழ்த்தப்படவுள்ளது. இதற்காக பிரமாண்ட நிகழ்வொன்று நடத்தப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதா அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி ஆராய்ந்துவருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து குறைந்தபட்சம் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது வளைத்துப்போடுமாறு ரணிலிடம் மொட்டுக் கட்சி இடித்துரைத்துள்ளது. அதனால்தான் வேட்பாளரை அறிவிப்பதற்கு 25 ஆம் திகதி வரை மொட்டுக் கட்சி காலஅவகாசம் எடுத்துள்ளது. (ச-44)

## பிரதி ஞாயிறுகளில் 'சமுத்திரதேவா'

யாழ்ப்பாணம், ஜூலை 11

நெடுந்தீவு - குறிகாட்டுவான் சமுத்திரதேவா படகுச் சேவை எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.30 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்பட்டு குறிகாட்டுவானைச் சென்றடையும். மீள 9 மணிக்கு குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்படும் என நெடுந்தீவு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25- 9)

## மின்கட்டணத் திருத்தம் 15 இல் இறுதி முடிவு

கொழும்பு, ஜூலை 11

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வீட்டுப்பாவனைக்கான மின்சாரக் கட்டணம் 25.5% குறைப்பதற்கான சாத்தியம் உள்ளது. சமய நிறுவனங்களுக்கான கட்டணம் 3வீதம் குறைக்கப்படவுள்ளது எனினும் தொழிற்சாலைகள், விடுதி களின் கட்டணங்களை இலங்கை மின்சார சபையின் அறிக்கை உள்ளடக்கப்படவில்லையென்று அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்தார். (ச-6)

## தொலைத்தொடர்பு சட்டவரைவு நாடாளுமன்றில் நிறைவேற்றம்

கொழும்பு, ஜூலை 11

இலங்கைத் தொலைத்தொடர்பு சட்டவரைவு திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

சட்டவரைவின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் முடிவடைந்ததும் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தைத் திருத்துவதற்காக கடந்த மே மாதம் தொழில்நுட்ப அமைச்சினால் இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதுவரை உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளைப் பின்பற்றும் வகையில், போட்டி நிறைந்த சந்தையில் நுகர்வோருக்கு நியாயமான ஒழுங்குமுறைப்படுத்தலை மேற்கொள்வதற்காக இந்தச் சட்டவரைவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, ஜூலை 11

எம்பிலிப்பிட்டியவில் கெல்லரக்வானா சாலையில் நேற்று முன்தினம் இரவு நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - சீனா உறவு இலங்கை நடுநிலையே

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 11**

**அயல்நாடுகளான இந்தியா, சீனாவைக் கையாளும் விதத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை. ஆசியாவில் தங்களுக்குள் போட்டியிடும் இரு பெரும் நாடுகளும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளது. நடுநிலை நாடு என்ற அடிப்படையில் நாங்கள் செயற்படுகின்றோம்.**

-இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், இலங்கையின் சுற்றுலாத் துறை, துறைமுக அபிவிருத்தி மீள்சக்தித்துறை அபிவிருத்தி போன்றவற்றுக்கு இந்தியா மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இலங்கையுடன் வலுவான கலாசார உறவுகளைக் கொண்டுள்ள சீனாவும் பலவருடங்களாக கொழும்பின் செல்வாக்கைப் பெறுவதற்காகப் போட்டியிட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த நாடுகளின் மோதல்களின் நடுவில் இலங்கை சிக்குண்டுள்ளது. சீனா, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுடன் ஈடுபாட்டைப் பேணுவதற்கு இலங்கை எண்ணியுள்ளது.

எனினும் அண்டை நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எதனையும் அனுமதிக்கமாட்டோம். நடுநிலை நாடு என்ற அடிப்படையில் நாங்கள் அதனைச் செய்யவேண்டும் - என்றார். (ச-இ)



## ஒலிம்பிக் போட்டிக்கு கிளி. மாணவன் தகுதி

கிளிநொச்சி, ஜூலை 11

கிளிநொச்சி மத்திய கல்லூரி உயர்தர கணிதப் பிரிவு மாணவன் கோ.சரித்திரன் ஒலிம்பிக் போட்டிக் குழாமில் இடம் பிடித்துள்ளான்.

இலங்கை முழுவதிலிருந்தும் விளையாட்டில் திறமைமிக்க 202 மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களின் தனிப்பட்ட ஆற்றல்களை பரிசோதித்து 56 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் உயரம் பாய்தல் போட்டியில் சாதனை படைத்து கோ.சரித்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ச-25-13)

## படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூலை 11

கடந்த ஜூன் முதல் வாரத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை முதல் வாரத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 89 சதவீதம் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தரவுகளின்படி வருடாந்தம் 1,053,332 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருகின்றனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## சஜித்துடன் இணைய டலஸ் பச்சைக்கொடி

கொழும்பு, ஜூலை 11


**ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-25-44)**

## ரயில்சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூலை 11

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தால் ரயில் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

போக்குவரத்து சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ரயில் நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தம் போராட்டம் சட்டவிரோதமானது. கடமைக்குச் சமுகமளிக்காத ரயில் நிலைய அதிபர்கள் சேவையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்களென போக்குவரத்து அமைச்சக செயலாளர் அறிவித்துள்ளார். (ச-இ)



### கோட்டையைப் பார்வையிட

## மாணவர்களுக்கு இலவச பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியை இம்மாதம் 20 ஆம் திகதி வரை கட்டணமின்றி பார்வையிடும் சந்தர்ப்பம் முன் அனுமதியோடு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது .

தொல்லியல் தினத்தை முன்னிட்டு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாளை 12ஆம் திகதி தொல்லியல் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணக் கோட்டை உட்பரப்பில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. யாழ்.கோட்டையில் முன்னெடுக்கப்படவுள்ள தொல்லியல் மரபுரிமை தொடர்பான பயிற்சிகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளில் மாணவர்கள் பங்குகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)



## தினம் தெரியுமோ?

**ஆடையில்லாத ஊரில் கோவணம் கட்டினவன் பைத்தியக்காரன் என்டொரு பழமொழி கேள்விப்பட்டிருப்பியள். ஆயிரம் பேர் ஒரு பொய்யைச் சொல்லேக்க ஒருத்தன் மட்டும் துணிஞ்சு உண்மையைச் சொன்னால் அதை எங்கடசனம் ஏற்கவே ஏற்காது. 'அந்த ஆயிரம் பேர் அறிவில்லாமலோ சொல்லுகினம், நீதான் பொய் சொல்லுறாய்' எண்டு உண்மை சொன்னவன்ர கதையைக் காதில வாங்கமாட்டினம். இப்ப பேஸ்புக் காலம். பேஸ்புக்கில எதைக் கக்கினாலும் அதை ஏன்?, எதுக்கு? எண்டு கேக்காமல் காவித்திரியிறதுக்கு ஒரு கூட்டமே இருக்குது. பேஸ்புக் எண்ட உலகத்தில உண்மை, பொய்யெல்லாம் முக்கியமே இல்லை. அங்க லைக்ஸ்கூட வாங்கிறதுக்கு என்ன விசயம் ஏப்பிடுதோ அதைக் காவிக்கொண்டு திரிஞ்சாக் காணும்.**

**இப்பிடித்தான் கிட்டடியில ஒரு மகளிர் இல்ல விசயத்தில உதயன் பேப்பர் சொன்னது பொய்யெண்டு கனபேர் பேஸ்புக்கில சத்தியெடுத்தவை. அந்தச் செய்தியில சொல்லுப்பட்ட பாரதூரமான விசயத்தை கணக்கில எடுக்காமல், வேற பிரச்சினையளை சொல்லி, ஆக்களை திசைதிருப்பிறதுதான் அப்பிடி பேஸ்புக்கில சத்தியெடுத்தவைக்கு குடுக்கப்பட்ட அசைண்ட்மெண்ட். அந்தச் செய்தியில சொல்லுப்பட்ட மாதிரி, அந்த மகளிர் இல்லத்தில மலையகப் பிள்ளையளை வெட்டையில குளிக்க வைச்சதையோ, அந்த இடத்தில கமெரா பூட்டுப்பட்டு இருந்ததைப் பற்றியோ, அந்தக் கமெராவில பொம்பிளைப் பிள்ளையள் குளிச்சது பதிவானாதோ, இல்லையோ எண்டதைப் பற்றியோ உந்தப் பேஸ்புக் போராளியள் கவலைப்படவோ கொஞ்சமெண்டாலும் ஆராயவோ இல்லை. எல்லாரும் மூளையைக் கழட்டி வைச்சிட்டு 'மதம்' எண்ட விசயத்தை மட்டும் தூக்கிப்பிடிச்சுக்கொண்டு மதம் பிடிச்சவை மாதிரி, 'அந்தச் செய்தி பொய்' எண்டு ஒற்றைக்காலில நிண்டிச்சினம். அதோட ஆளுநர் சொல்லாத விசயங்களை சொன்னமாதிரியும் சில மீடியாக்கள்போட, 'பாத்திங்களோ, அப்ப செய்தி பொய்தானே' எண்டு புளுகப்பட்டிச்சினம்.**

**ஆனால் எவ்வளவு நாளைக்குத்தான் பொய் நிண்டுபிடிக்கும்? கொழும்புக்குப் போன ஆளுநர் திரும்பி வந்தவுடனயே, தான் சொன்னதெண்டு பொய்யான செய்தியளை போடவேண்டாமெண்டும், தன்ர உத்தியோகபூர்வ அறிவிப்புகள் தங்கட வெப்சைட்டில வருமெண்டும், அதில இருக்கிறதுதான் உண்மையெண்டும் சொல்லியிருக்கிறா. அந்த வெப்சைட்டில இப்பவும் அவா போனகிழமை போட்ட 'மகளிர் இல்லத்தையும், சிறுவர் இல்லத்தையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்' எண்ட செய்தி இருக்குது. அந்தச் செய்தியைப் போய் வாசிச்சால் எது பொய், எது உண்மை எண்டது தெரியும். அதைவிட இன்னொரு விசயமும் சொல்லோணும். 'உந்த விசயத்தில மூக்கை நுழைச்சால் நீங்கள் மதரீதியா பிளான் பண்ணி வேலை செய்யிறியள் எண்டு சனம் நினைக்கும். அதால உதை மெல்லக் கைவிடுங்கோ' எண்டு ஆளுநருக்கு சில மேல்மட்டங்கள் அழுத்தம் குடுத்தவை எண்டும் கேள்வி. ஆனாலும் ஆளுநர் அதுக்கெல்லாம் அசையாமல் நடந்த அநியாயத்துக்கு முடிவு கட்டுறதில உறுதியா இருக்கிறாவாம். அப்ப, இனிமேல் அதிரடியா சிலது நடக்கும் எண்டு எதிர்பாக்கலாம் போல.**



- பட்சி

padsi@uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாகன இறக்குமதி ஓகஸ்ட்டில் முடிவு

கொழும்பு, ஜுலை 11
வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் ஓகஸ்ட் மாதம் எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு இறுதி அறிக்கையை ஓகஸ்ட் மாதமே சமர்ப்பிக்கவுள்ளது. சுற்றுலாத்துறைக்காக ஆயிரம் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-25)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (11.06.2024) செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### கந்தையா வசந்தகுமார்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை கிழக்கு
மீசாலை

குடும்பத்தினர்

(CS 27932) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 07 - 1961



இறப்பு 06 - 07 - 2024

### விமலாதேவி பாலசுப்பிரமணியம்

இலங்கை யாழ். நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி விமலாதேவி பாலசுப்பிரமணியம் கடந்த (06.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - ஜானகி தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், கஜேந்தினி, கஜரூபன், தயாளினி, தனுசாலினி, றம்மியா, ஆகியோரின் அன்புத் தாயாரும், திவாகரன், துசாந்தினி, மனோச்குமார், பிரசன்னா, கஜலக்ஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசேந்திரம், வரதராஜா, புஸ்பராணி, கேதீஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தஷ்மிதா, ஹரிதஸ்மன்,ஹீர்த்மிதா, ஹரிஸ்மிதா, பானுகா, அனுசாந், செறோன், ஆக்ஷயன், அக்ஷனா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 645 8739
077 711 0958

393/23 Temple Road
Nallur, jaffna

(CS/55637) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 09 - 1943



மறைவு 10 - 07 - 2024

### சின்னத்தம்பி இராசம்மா

பெரியவளவு, புலோலி தெற்கு, புலோலியை வசிப்பிடமாக கொண்ட சின்னத்தம்பி இராசம்மா (ஓய்வுபெற்ற கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர்) அவர்கள் நேற்று புதன்கிழமை (10.07.2024) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் அமரர்கள் சின்னத்தம்பி - பாறுபதி தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர்கள் கந்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், அமரர் சின்னத்தம்பி அவர்களின் மனைவியும், அமரர் இராசலிங்கம், அமரர் சகுந்தலா மற்றும் நேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இரதிதேவி(குஞ்சு), அமரர் சந்திரகுமார்(பாபு) மற்றும் இந்திரகுமார்(பபி) (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்த்துறை திணைக்களம் கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் நாகராஜா (அரிசி ஆலை உரிமையாளர் மீசாலை) மற்றும் கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகர திட்டமிடல் அமைச்சு பருத்தித்துறை பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிதர்ஷன்(அமெரிக்கா), தனுஷியா(அவுஸ்திரேலியா), கிரிஜா, திலோஷன்(அமெரிக்கா), யதுஜா, ஹர்சனா, தர்னிஸ், ஆதுஷன் மற்றும் அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஷாரா(அமெரிக்கா) மற்றும் பெண்குழந்தை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-07-2024) வியாழக்கிழமை காலை 8:00 மணிக்கு சைவக்கிரிகைகள் ஆரம்பமாகி காலை 9:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானதிற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகள்:
இரதிதேவி(குஞ்சு)(மகள்) - 094 (77) 779 3984 Viber/Whatsapp
இந்திரகுமார்(பபி)(மகன்) - 094 (77) 360 6190 Viber/Whatsapp
(075) 560 6190 Local

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 11 - 1992



மறைவு 09 - 07 - 2024

### சுரேஸ்குமார் தருஷன்

கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுரேஸ்குமார் தருஷன் அவர்கள் கடந்த 09.07.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பரமேஸ்வரி, காலஞ்சென்ற யோகநாதன் - பத்மாவதி ஆகியோரின் அன்புப் பேரனும், சுரேஸ்குமார் (அமரர்) - நந்தினி தம்பதியரின் பாசமிகு மகனும், சுபராஜ், கீர்த்தனா ஆகியோரின் ஆருயிர் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Whatsapp-077 168 4381
077 511 8982

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 909) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## ரணிலின் புதிய தந்திரம்

இதுவரை காலமும் அரசியல்வாதிகளிடம் மட்டுமே பிரயோகித்து வந்த தன் தந்திரங்களை இப்போது அரச உத்தியோகத்தர்களை நோக்கித் திருப்பியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களும் அரச உத்தியோகத்தர்கள் நடத்திய சுகவீனப் போராட்டத்தால் நாட்டின் பெரும்பாலான திணைக்களங்கள் ஸ்தம்பிதமானதால் உண்டான மக்களின் அதிருப்தி இன்னொரு அரகலயவை உண்டாக்கிவிடுமோ என்ற மனக்கிலேசத்தை ரணிலிடம் உண்டுபண்ணிவிட்டது. சுமார் 200க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இப்படி ஒரேசமயத்தில் சுகவீனப் போராட்டத்தில் ஈடுபடுவதென்பது தற்செயலான விடயமல்ல. மிகக்கச்சிதமாகப் பின்னப்பட்ட வலைப்பின்னல் தொடர்பொன்றே இவ்வளவு தொழிற்சங்கங்களையும் ஒரேபுள்ளியில் குவிய வைக்கின்றது என்றும், அந்த மறைகரம் நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி, தன்னைத் தேர்தலில் மண் கௌவ வைக்க நினைக்கின்றது என்றும் ரணில் எண்ணுகின்றார். அதனால் சம்பள உயர்வு உள்ளிட்ட தமக்கான குறைகளை நீக்குமாறு கோரி சுகவீனப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் மீது ரணிலின் கோபம் திரும்பியதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால், தேர்தல் மிக அண்மித்துள்ள சமயத்தில், அரச உத்தியோகத்தர்களை நேரடியாகப் பகைப்பதோ அல்லது அவர்களைப் பழிவாங்குவதோ இன்னும் மோசமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். இதுவும் ரணிலுக்கு நன்கு தெரியும். சேலையும் கிழியக்கூடாது, முள்ளும் குத்தக்கூடாது என்ற நிலைமை.

இப்படிப்பட்ட நிலையில்தான், 'சுகவீனப் போராட்டம் நடந்த நாள்களில் பணிசெய்த அலுவலர்களுக்கு விசேட கொடுப்பனவுகள், பாராட்டுச் சான்றிதழ்கள், பதவியுயர்வில் விசேட புள்ளிகள் போன்றன வழங்கப்படும்' என்ற தன் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரத்தையும் ரணில் பெற்றிருக்கிறார். இதனால் இந்த சுகவீனப் போராட்டத்தில் கலந்துகொள்ளாதவர்களுக்கு இப்போதைக்கு அதிர்ஷ்டம் அடித்தாலும், அவர்கள் தமது சக பணியாளர்களின் ஒற்றுமையான போராட்டத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டனர் என்ற பழிக்கு ஆளாகும் நிலையும் ஏற்படப்போகின்றது. அவ்வாறு பணிக்குச் சென்றவர்களுக்கு இனிமேல் ஏதேனும் பிரச்சினைகள் அதிகாரத்தரப்பால் ஏற்பட்டால், அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்கள் துணையாக நிற்கப்போவதில்லை. ஏனெனில் தமது போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்களை தொழிற்சங்கங்கள் இனிமேல் 'ஒதுக்கப்பட்டவர்களாக' தள்ளியே வைத்திருக்கும். இந்த நிலைமை அரச உத்தியோகத்தர்களிடையே பிளவுகளை உருவாக்கும். சுகவீனப்போராட்டத்தின்போது பணிக்குச் செல்லாதவர்கள் ஒரு குழுவாகவும், சென்றவர்கள் இன்னொரு குழுவாகவும் எதிரெதிர் நிலைகளில் இயங்கக்கூடிய சூழல் தோன்றக்கூடும்.

ரணிலின் இப்போதைய தந்திர வியூகத்தில் இன்னொரு விடயமும் பொதிந்திருக்கிறது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொள்ளாதவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் உள்ளிட்ட சலுகைகள் கிடைக்கும் என்ற நப்பாசையில், பெரும்பாலான அரசபணியாளர்கள் போராட்டங்களுக்கு ஒத்துழைக்காமல், பணிக்குச் செல்லும்முடிவை எடுக்கும் சாத்தியங்களும் அதிகம். இதனால் இனிவரும் காலங்களில் அரச உத்தியோகத்தர்களின் எந்தவொரு போராட்டமும் பூரணவெற்றி என்ற நிலையை எய்த முடியாமல் போய்விடலாம். அவ்வளவு ஏன், போராட்டங்கள் முற்றாகப் பிசுபிசுக்கவே சாத்தியங்கள் அதிகம். அரசஉத்தியோகத்தர்களின் பலவீனத்தைக் கண்டறிந்து ரணில் எய்துள்ள இந்த அஸ்திரம், அவர் நினைத்தது போல அரச உத்தியோகத்தர்களின் போராட்டங்களை மழுங்கடிக்குமா? இல்லையேல் இந்தத் தந்திரத்துக்கு பலியாகாமல் தமது உரிமைக்காக அவர்கள் இன்னும் வீரியத்தோடு போராடுவார்களா? என்பதை அடுத்து வரும் நாள்களில் வெளிப்பட்டுவிடும்.




# யாழில் 257 திட்டங்கள் : எம்.பி.க்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

**ஜனாதிபதியின் விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் யாழ். மாவட்டத்தில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் 257 திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலகத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு 11 பிரதேச செயலர் பிரிவுகளில் 146 திட்டங்களுக்கு 47 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் 14 வேலைத் திட்டங்கள் இதுவரை முடிவுறுத்தப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு 13 பிரதேச செயலர் பிரிவுகளில் 21.45 மில்லியன் ரூபாவில் 97 திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் 9 வேலைத் திட்டங்கள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு 14 திட்டங்களுக்கு 25 மில்லியன் ரூபா நிதி 4 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலைத்திட்டங்கள் விரைந்து முடிக்கப்படும் என யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார். (ஒ-125)

## விடைத்தாள் மதிப்பீடு; கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 11

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகள் மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, அமைச்சரவை சடந்த திங்கட்கிழமை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்மூலம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ப-66)

## வரி விதித்தால் விலை உயரும்



முதன்முறையாக முட்டை மீதான வற்வரியை அரசாங்கம் நடைமுறையாக்கியமையால் பெருமளவில் உள்ளூர் முட்டைகளின் விலை அதிகரிக்கும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. முட்டைக்கு வற்வரி நடைமுறைப்படுத்தப்படுவது இந்த நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அதிவெப்பம்; ஜூனில் பதிவு

கொழும்பு, ஜூலை 11

வரலாற்றில் பதிவான மிக வெப்பமான மாதமாக கடந்த ஜூன் மாதம் பதிவாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலை மாற்றக் கண்காணிப்புச் சேவை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஒவ்வொரு மாதமும் மிக வெப்பமானதாகப் பதிவாகியுள்ளது. எல் நினோ பருவநிலை மாற்றம் வெப்பநிலையை உயர்த்தியுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஓய்வூதியம் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 11

அரச துறைகள் பல பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும் 7 இலட்சத்து 8 ஆயிரத்து 231 ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் தெரிவித்துள்ளார். (ச-இ)

### நாளை

12.07.2024

வெள்ளிக்கிழமை - ஆனி - 28

சுபநேரம் : 05.59 - 07.29

ராகுகாலம் : 10.29 - 11.59

### நாளொரு நல்வார்த்தை

**ஆரோக்கியமாக இருப்பது என்பது உங்களை மேலும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் செயல்.**

- ரொபின் சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 11
இந்து சமயப்பேரவை அவசர நிர்வாகசபைக் கூட்டம், பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப்பேரவை மண்டபத்தில் சபைத் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது. ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நல்ல திருப்பம் ஏற்படும். எச்சரிக்கையாக இருக்கவும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பேச்சு சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை பாதிக்க வாய்ப்புண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். கையிருப்புக் குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொறுமை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தொல்லைகள் நீங்கும்.

# பண்ணிசைக் கற்கை விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜுலை 11
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துக் கற்கைகள் நிறுவகத்தின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையமூடாக முன்னெடுக்கும் பண்ணிசை சான்றிதழ் கற்கை நெறியின் இணைய வழிக்கற்கைநெறி மூன்றாம் அணிப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது வட்ஸப் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பிராந்திய அலுவலகம், 'குருகுலம்' ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.
விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 0776776249 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ப-25-66)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 11
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும். நாளை வெள்ளிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுலை 11
சரவணை தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டுச் சிறப்புச் சொற்பொழிவு, ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.
சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சைவப்புலவர்கள் சி.கா. கமலநாதன், செ.த.குமரன், ச.முகுந்தன், பொன். சந்திரவேல், கந்த. சத்தியதாசன், இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன், நித்தியபாபுதரன், க.கயிலைவாசன் ஆகியோரின் சொற்பொழிவும் இடம்பெறும். (ப)






## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 11
தொழிற்பயிற்சி ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், நிவித்திரா தொழிற்பயிற்சி மேம்பாட்டு நிலையத்தின் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. (ப-125)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுலை 11
மாவடி பூதரசி அம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம், நாளை வெள்ளிக்கிழமை காலை 8.28 மணிக்கு நடைபெறும்.
நேற்றுப் புதன்கிழமை கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகிய நிலையில், இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணி முதல் எண்ணெய்க் காப்பு நிகழ்வு இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

★★★★

யாழ்ப்பாணம், ஜுலை 11
குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரிஅம்பாள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம், நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 மணி முதல் காலை 7.15 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.
பாலஸ்தாபன
கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## குருபூசையும், சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஜுலை 11
சைவவாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும், மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், சிறப்புச் சொற்பொழிவும், நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் 'மாணிக்கவாசக சுவாமிகளின் அன்பு' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரனின் சொற்பொழிவு இடம்பெறும். (ப-25)

# 'காத்தவராயன் கூத்து' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 11
நவிண்டில் கப்பியந்தோட்ட பெரியஞ்சீமா ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்கள் நடிப்பிலான காத்தவராயன் கூத்து இறுவட்டு வெளியீட்டு விழா, ஆலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
அறநெறிப்பாடசாலைத் தலைவர் வீ. அருள்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி செயலகம் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன், சிறப்பு விருந்தினர்களாக கிருபா சாரதி பயிற்சிப்பாடசாலை அதிபர் அ.கிருபாகரன், ஜே/360 கரணவாய் வடக்கு, கிராம சேவகர் சி.தவமோகன், இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ச.ஜெயச்செல்வி, கௌரவ விருந்தினர்களாக கப்பியந்தோட்ட பெரியஞ்சீமா ஞானவைரவர் ஆலய கணக்காய்வாளர் கலாநிதி வேலுமயிலும், பிரபா ஹாட்வெயார் உரிமையாளர் த.பார்த்தீபன், கோயில் பூசகர் கி.ஞானசேகரம், ஆலயத் தலைவர் சுரேஸ்குமார் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

மிருசுவில், துர்க்காபுரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலயத்தில் அமைக் கப்பட்டுள்ள பிள்ளையார் மற்றும் முருகன் சந்நிதா னங்களுக்கான கும்பாபிஷே கம், ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டி, எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு, திரவியங்கள் சாத்தும் நிகழ்வு என் பன இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 3 மணி வரை இடம்பெறுமென ஆலய பரி பாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-131)

# அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மேற்குவாசல் திரிதள இராஜகோபுர அடிக்கல் நடு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.38 மணி முதல் முற்பகல் 10.20 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளதாக ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-66)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **பவித்திரா அப்பாசாமி** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பிறேமகுமாரி அப்பாசாமி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 22.04.1956 மறைவு 09.07.2024

பிரிவால் துயருறும்:
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
அலுவலக உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

(CS/905) J-1

## அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருநெல்வேலி.
### வருடாந்த பொதுக்கூட்டம் - 2024

இவ் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 21.07.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இவ் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் யாவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
5. பிரேரணைகள் பற்றி ஆராய்தல்
6. புதிய நிர்வாக சபை தெரிதல்
7. நன்றியுரை.

பிரேரணை சமர்ப்பிக்க விரும்புவர்கள் 15.07.2024 ஆம் திகதிக்கு முன்னர் ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாக சபை



கிளிநொச்சி, அருள்மிகு கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன கும்பா பிஷேகம், நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. (ப-113-66)


## தேவை

ஆண்டு 09 கல்வி கற்கும் மாணவனுக்கு ஆசிரியர் தேவை
இடம்: யாழ். பல்கலைக்கழக வீதி யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 199 9220

## தேவை

வீட்டுப் பெயின்ரிங்
தளபாட பொருட்களுக்கு வாணிஸ் அடித்தல்.
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 199 9220

## விற்பனைக்கு

கடைத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 760 3644


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 02 . 1955



மறைவு 10 . 07 . 2024

எமது குடும்பத் தலைவி

### திருமதி திருவம்பலமயம் லோகேஸ்வரி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருவம்பலமயம் லோகேஸ்வரி நேற்று (10.07.2024) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவமயம் திருவம்பலமயம் (கதிரவேலு மருந்துக்கடை- சங்கானை) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீராம் (UK) அவர்களின் அன்புத் தாயாரும், ஜலஜாவின் (UK) அன்பு மாமியும், ஸ்ரீஜாவின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற வர்களான Dr.கெங்காதரம்பிள்ளை - தபோதினி தம்பதியரின் அன்பு மகளும், சிவமயம் - பார்வதி தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, Dr. விக்கினேஸ்வரன் (வைத்திய நிபுணர் பொது வைத்தியசாலை - Horana) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வநாயகம், காலஞ்சென்ற விவேகானந்தராசா, மயூரி (ஆசிரியர் - சைவ மங்கையர் கழகம் - கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், நிறைஞ்சலா, ஜானகி, தர்சினி, மதனராஜ், சுகிர்தலா ஆகியோரின் பாசமிகு சித்தியும், கஜானி, தரனேஸ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இரத்தினவாசா
சித்தன்கேணி. (CS 907) A-1 தகவல்: குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 03 . 1942



மறைவு 11 . 06 . 2024

### செல்லையா கார்த்திகேசு

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கார்த்திகேசு கடந்த 11.06.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கௌரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பராசக்தி தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கழுக்குன்றன் (London), கௌரி (Germany), கல்யாணி (France), நந்தினி, எல்லாளன் (France), செவ்வேள் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜினிமலர் (London), தவசோதி (Germany), மகேஸ்வரன் (France), சிவாகரன் (அஞ்சல் அதிபர் - அச்சுவேலி), விஷ்ணுப்பிரியா (London) ஆகியோரின் மாமனாரும், கணேசநாதன் (Canada), பூலோகநாயகி, இலட்சுமணநாதன் (சிவசம்பு களஞ்சியம்), காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் மகேஸ்வரி (London) ஆகியோரின் சகோதரரும், தனலட்சுமி (Canada) காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், அருந்ததி மற்றும் தேவபாலன் (London), காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் (Canada), ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் (France) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தவராசா, திருநாவுக்கரசு, பாலாம்பிகை மற்றும் விவேகானந்தசிவம் (Canada), இரத்தினேஸ்வரி (France) ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான செல்லாபரணம், சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கனகசபாபதி (சுங்கத் திணைக்களம்) யின் மருமகனும், பவித்திரா - தயாபரன், பிரதீபன் - சங்கீதா, பிரதாபன் - பிருந்தா, றஜித்திரா, விபூர்தினி - இரமணன், மாதுளன், துவாரகன், மாதங்கி, தனுஸ்ஸன், வரகுணன், தேமதுரன், ஆய்ஷன், அபினுஷன், அவனீஷ் ஆகியோரின் பேரனும், திவியா, தானியா, தனுயன், அர்ச்சுனா, சிவா, வியான், ரியான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வில் நேரில் கலந்து கொண்டவர்கள், பதாகைகள் வைத்தோர், அஞ்சலிப்பிரசுரம் வழங்கியோர், தொலைபேசி மற்றும் ரெலிமெயில் மூலம் துயர் பகிர்ந்தோர் ஆகியோர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் இன்று (11.07.2024) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேல்மனை,
இணுவில் மேற்கு, இணுவில். (CS/55646) J-1 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஜூலை 11
மன்னார்- பேசாலைப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 28 கிலோகிராம் கஞ்சாப் பொதிகள் வவுனியா போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கூலர் ரக வாகனமொன்றில் கஞ்சா கடத்தப்படுவதாக, வவுனியா பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் - பேசாலைப் பகுதியைச் சேர்ந்த 27 மற்றும் 30 வயதுடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-113-110)

# பரிசில்தின நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜூலை 11*
*யாழ். கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசில்தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மேற்படி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*நிகழ்வில் யாழ்ப்பாணம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கனக சபை சுவீதன் பிரதம விருந்தினராகவும், தொழிலதிபர் செல்லத்துரை திருமாறன், யாழ்ப்பாணம் வலய ஆரம்பக் கல்விப் பிரிவு ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி கலா நாயகி சோதிதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-66)*

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
சண்டிலிப்பாய், கல்வளை காளியம்மன் ஆலய அலங்கார உற்சவம், நாளை வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு விளக்கேற்றல் பூசையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை பொங்கல் பூசையுடன் நிறைவுபெறுமென ஆலய பரிபாலன சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-63)

## காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவில் சம்பியன் லேனில்
புதிய வீட்டுடன் 2 3/4 பரப்புக்
**காணி விற்பனைக்கு உண்டு.**
தொடர்பு:- **077 985 6762**
(CS/55641) J-1

## காணி விற்பனைக்கு

யாழ். கொழும்புத்துறை,
சுவாமியார் வீதியில்
3 1/4 பரப்பு வெற்றுக்காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 910 2148, 077 582 5094, 077 833 2909

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

SV முருகேசு நிறுவனத்திற்கு காவடி மார்க்
கற்பூரம், ஊதுபத்திகள் விற்பன்ன செய்வதற்கு
யாழ் மாவட்டத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும்
விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**தொடர்புகளுக்கு:**
**SV. முருகேசு 154, Hospital Road, Jaffna.**
**077 485 3073**
(CS/55638) J-1

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 11.12.1966 | | 09.07.2024 |



**சுகந்தி எதிர்மனசிங்கி (சேவியர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கந்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சுகந்தி எதிர்மனசிங்கி (சேவியர்) நேற்று முன்தினம் (09.07.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் R.L சேவியர் - சகுந்தலா சேவியர் தம்பதியரின் அன்பு மகளும், சுரேஷ் எதிர்மனசிங்கியின் ஆருயிர் மனைவியும், மினுஷா, மைக்கல் லக்ஷானின் அன்புத் தாயாரும், இஷானி யின் அன்பு மாமியாரும், ரஜிந்திரகுமார், சுனித்தா ஆகியோரின் இனிய சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.07.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் 99/25 H Old DRO Road, Kandana இல்லத்திலிருந்து பொரளை மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
(CS/55643) J-1 **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 17.12.1947 | | 09.07.2024 |



**ஐயம்பிள்ளை சீவரத்தினம் (தேவி)**

உச்சியோடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சீவரத்தினம் (தேவி) நேற்றுமுன்தினம் (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் - நாகி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - அம்மாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் வசந்தகுமார், சரஸ்வதி, தனலட்சுமி (பிரான்ஸ்), ஹேமலதா, விஜயகுமார், டிலிப்குமார் (பிரான்ஸ்), தாட்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் பூமணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(CS55642) N-1 **[illegible]**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26.11.1946 | | 11.06.2024 |



**சின்னத்தம்பி அருமைநாயகம்**

*முப்பத்தொரு நாட்கள் கடந்து சென்றாலும்*
*ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்*
*குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!*
*மாண்டாலும், மறையாது*
*உங்கள் நினைவு என்றென்றும்.*

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு எங்களது துக்கத்தில் பங்கு கொண்டு நேரில் வருகை தந்தும், தொலைபேசி, மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபம், ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**தகவல்:**
(CS/55631) J-1 **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

நாமே ஆரம்பம்
# வெல்வோம் ஸ்ரீலங்கா
SMART தூரங்களோடு

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான சேவைகளை வழங்க வெளிநாடுகளில் பணிபுரிவோருக்காக நாடு முழுவதும் பரந்திருக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளைகளின் வலையமைப்பு




Migrant Resource Center
வெளிநாட்டு வளங்கள் மையம்

District Center
மாவட்ட மற்றும் பயிற்சி நிலையம்

இந்த இலக்கத்துக்கு அழையுங்கள். 0112864241 அல்லது 1989
நேர்மையான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தவறாது பதிவு செய்யுங்கள்.
www.slbfe.lk

## நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை

ஜூலை 12 - 13
மு.ப. 9.00 மணியிலிருந்து
பி.ப. 4.00 மணி வரை

# கிளிநொச்சி
## மத்திய கல்லூரி மைதானத்தில்

வெளிநாட்டு வேலை தேடும் உங்களுக்கும்...

- அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
- பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
- பாடசாலைகளுக்கு 'Smart Board'
- சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள வெல்வோம் ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிற்போனால் நாடு கொந்தளிக்கும்!

## அஸ்கிரிய பீடாதிபதி வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 11**

**தேர்தலைப் பிற்போட்டால் அது நாட்டில் கொந்தளிப்பை உருவாக்கும் என்று அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி வரக்கேகொட ஸ்ரீ ஞானானந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ், நேற்றையதினம் அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி வரக்கேகொட ஸ்ரீ ஞானானந்த தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போதே பீடாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தேர்தலைப் பிற்போட வேண்டிய அவசியம் எதுவுமில்லை. தேர்தல் திணைக்களம் தனது பணியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். அந்த அனுமதி வழங்கப்பட்டால், தேர்தலை நடத்தக்கூடிய ஏதுநிலைதான் நாட்டில் தற்போதுள்ளது என்று ஸ்ரீ ஞானானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

# சாவ. மருத்துவமனைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 11
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் விபத்து மற்றும் சத்திரசிகிச்சைகள் உள்ளிட்ட பிரிவுகளின் தேவையைக் கருத்திற்கொண்டு 150 கிலோ வோல்ட் வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று வழங்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நடவடிக்கையால் தற்காலிக அடிப்படையில் மேற்படி மின்பிறப்பாக்கி மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை- நிரந்தரப் மின்பிறப்பாக்கியைப் பெற்று மருத்துவமனையில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான அறையொன்றை அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரிவித்துள்ளார். (அ-ம-66-9)

# வேலை நிறுத்தத்தால் நாடு சீர்குலையுமாம்!

## வஜிர எம்.பி. தெரிவிப்பு



தேர்தலில் வெற்றிபெற முடியாத தரப்பினர்தான், நாட்டில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளன. எந்தெந்தக் குழுக்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றன என்பதை மக்கள் அடையாளம் காணவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.
ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை காலாகாலமாக வீழ்ச்சியடையச் செய்து வருகின்றன. அரசியல் கட்சிகள் அவ்வப்போது வெளியிடும் பொய்யான அறிக்கைகளால் நாட்டின் நிதிப் பொறுப்பு வலுவிழக்கிறது.
வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்தார். இலங்கை மக்களுக்கு வாழ்வளித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களை ஆரம்பித்து நாட்டைக் கட்டியெழுப்பும் இலக்குகளை எட்டியுள்ளார்.
சில தரப்பினர் தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் கோரும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டுமாயின் 18 வீத வற்வரி 21வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். இது தனிப்பிட்ட நலன்களுக்கான நாட்டை சீர்குலைக்கச் செய்யும். நாம் இப்போது மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ள தருணம் இதுவாகும் - என்றார். (அ-ச-இ)

# மரண அறிவித்தல்



## அப்பாசாமி பிறேமகுமாரி

ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் முக்கிராவத்தை, கெருடாவில் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாசாமி பிறேமகுமாரி அவர்கள் கடந்த (09.07.2024) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கனகராசா - ருக்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துச்சாமி - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகேந்திரன், ஞானேந்திரராணி, காலஞ்சென்ற பிறேமச்சந்திரன், யமுனாராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன் (லண்டன்), காயத்திரி (Data Entry Operator - இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி), சிந்துஜா (Development Officer - பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்-வவுனியா), பவித்திரா (Co-operative Development Officer - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), தசீலன் (உரிமையாளர் - மோகன் Travels, Technician - KS Solar (Pvt)Ltd, கல்வியங்காடு), தர்மிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி (லண்டன்), திருச்செல்வன் (Pharmacist - City Medicals, Jaffna.) மோகனராஜ் குமார் (Engineering Assistant- நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை - வவுனியா), சஞ்சீபன் (Station Master- புகையிரத நிலையம் - வவுனியா), பிருந்தா (Doctor-கமலா மெடிக்கல் கிளினிக் -புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்சன் (லண்டன்), கிருத்திகன் (லண்டன்), திவிஷன் (லண்டன்), கயல்விழி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), துலாஞ்சலி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கிருஸ்ணவி (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), தருஷ்ணிகன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), டிவேனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பாலயோகினி, பொன்னம்பலம், கிரிசாம்பாள், பரமானந்தம் (சுவிஸ்), தங்கநாயகம், காலஞ்சென்ற சிவசாமி, சரஸ்வதி, கணேசநாயகம் (ஓய்வுநிலை சிரேஷ்ட தொழினுட்ப உத்தியோகத்தர்), விஜயகுமாரி, சபாநாதன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மாலதி (சுவிஸ்), பானுமதி (பிரான்ஸ்), சுதாகரன் (வவுனியா), பாலேந்திரன் (பிரான்ஸ்), திருக்குமரன் (பிரான்ஸ்), ராஜினி (லண்டன்), நிரோஷன் (பிரான்ஸ்), நிரோஜினி, நிரோதிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தையும், சசிக்குமார் (லண்டன்), வரதகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தியும், நிருபா (சுவிஸ்), தருஷ்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் ஊரிக்காடு மயிலதனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தோற்றம்**
**22.04.1956**


**மறைவு**
**09.07.2024**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 301 8041 (மகன்)**

CS 142) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைபாடுகளை...


வட மாகாண சபை
උතුරු පළාත් සභාව
NORTHERN PROVINCIAL COUNCIL

முகப்பு | எம்மைப்பற்றி | அமைச்சுக்களும் திணைக்களங்களும் | செய்திகள் | சுற்றறிக்கைகள் | English | සිංහල

சிறுவர் இல்லங்கள் தொடர்பாக ஆளுநர் செயலகத்தின் ஊடக அறிக்கை

/ ஆளுநர்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும், பிரதேச செயலாளரின் விசாரணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கள விசாரணை அறிக்கைக்கு அமைவாகவும், துறைசார் திணைக்கள ஆணையாளருக்கு கௌரவ ஆளுநரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக ஆளுநரினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழு மீண்டும் களவிஜயம் மேற்கொண்டு ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்துக்குள் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களும் உரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டவரையறைகளைப் பின்பற்றி இயங்குவதை உறுதிப்படுத்தும் விதமான அறிவுறுத்தல் ஆளுநர் அவர்களால் தொடர்புடைய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூகவலைத் தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு நாம் பொறுப்புக்கூற முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எமது அறிவிப்புகளை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பார்வையிட முடியும்.

குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு ஆளுநரின் உத்தரவை வெளிப்படுத்தும் [illegible]0ஆம் திகதிய (நேற்றைய) மாகாண இணையத்தளச் செய்தி.

இது தொடர்பான ஆளுநர் அலுவலக அறிக்கை, வட மாகாண இணையத்தளத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில் இயங்கும் சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும், பிரதேச செயலாளரின் விசாரணைக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட கள விசாரணை அறிக்கைக்கு அமைவாகவும், துறைசார் திணைக்கள ஆணையாளருக்கு ஆளுநரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழு மீண்டும் களவிஜயம் மேற்கொண்டு ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்துக்குள் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களும் உரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டவரையறைகளைப் பின்பற்றி இயங்குவதை உறுதிப்படுத்தும் விதமான அறிவுறுத்தல்களும் ஆளுநரால் தொடர்புடைய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆளுநரின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூகவலைத் தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு நாம் பொறுப்புக்கூற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எமது அறிவிப்புகளை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாகப் பார்வையிட முடியும் - என்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

*ஆளுநரின் குறித்த அறிவிப்பு மூலம், 'தெல்லிப்பழை மகளிர், சிறுவர் இல்லங்களை மூட உத்தரவிடவில்லை' என்று பரப்பப்பட்ட தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஆளுநர் உத்தரவிட்ட செய்தி அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இணையத்தில் இப்போதும் இருக்கிறது. எனவே அதுவே உண்மையான தகவல் என்பதையே ஆளுநர் மீண்டும் உறுதி செய்திருக்கிறார்.*

*தெல்லிப்பழையில் இயங்கும் மகளிர் இல்லமொன்றில், மாணவிகள் குளிக்கும், உடைமாற்றும் பகுதிக்கு மேலாக சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும், இன்னொரு சிறுவர் இல்லம் அனுமதியற்று இயங்கி வருகின்றமை தொடர்பிலும் உதயனின் ஜூலை 4ஆம் திகதிய பதிப்பில் செய்தியொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.*

*ஆளுநர் அலுவலகத்தின் செய்தியறிக்கைகள் வெளிப்படுத்தப்படும், www.np.gov.lk இணையத்தளத்தில் ஜூலை 4ஆம் திகதி 'யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பணிப்புரை' என்ற தலைப்பில் ஆளுநரின் உத்தரவு தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் வழக்கம்போல இந்தச் செய்தி குறித்த இணையத்தில் பதிவேற்றப்பட முன்னதாக ஜூலை 3 ஆம் திகதியே ஊடகங்களுக்கு ஆளுநரின் உத்தியோகபூர்வ 'வட்ஸப்' குழுமத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது. (அவை தொடர்பிலான 'ஸ்க்ரீன் ஷொட்' ஆதாரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன)*

***'மகளிர் இல்லம் ஒன்றில் பொருத்தமற்ற இடத்தில் நிறுவப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்கள் தொடர்பிலும், பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லம் தொடர்பிலும் அபயம் பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்தது. 'அபயம்' பிரிவினரால் கோரப்பட்டதற்கு அமைய தெல்லிப்பழைப் பிரதேச செயலாளரால் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு, களவிஜய விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கைகளின் பிரகாரம் தெல்லிப்பழைப் பகுதியில் இயங்கும் குறித்த இரண்டு இல்லங்களையும் மூடுமாறும், விடயம் தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது' என்பதாக ஆளுநர் அலுவலகத்தின் அந்தச் செய்தியறிக்கை அமைந்திருந்தது.***

*அதை அடிப்படையாகக் கொண்டு மேலதிக புலனாய்வுத் தேடல்களின் மூலமும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் உதயனின் ஜூலை 4 ஆம் திகதிய செய்தி அமைந்திருந்தது.*

*ஆனால், உதயன் வெளிப்படுத்திய செய்தி தவறு என்று சமூகவலைத்தளங்களில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறிருக்கையில், ஆளுநரின் நேற்றைய அறிக்கையானது உதயனின் செய்தியின் உண்மைத் தன்மையை மீளவும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதை உதயன் சுட்டிக்காட்ட விரும்புகின்றான்.*

*வாசகர்கள் www.np.gov.lk என்ற தளத்துக்குச் செல்வதன்மூலம், உதயனின் முன்னைய செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பிலும், ஆளுநரின் நேற்றைய உத்தரவு தொடர்பிலும் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.* (அ-ம-125-7)

## அத்தியாவசிய...

வாகவும், ஒரு கிலோ சிவப்புச் சீனி 375 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 263 ரூபாவாகவும், ஒரு கிலோ பாசிப்பயறு 998 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

## நாடாளுமன்றக்...

கூறியிருப்பதாகவும், வழமைபோன்று நாடாளுமன்றக் குழு இதுதொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டுமெனவும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் எந்த வகையிலும் பிரிவுக்கும், குழப்பங்களுக்கும் இடம் கொடுக்காத வகையில் ஒற்றுமையாக இந்த விடயத்தில் தீர்மானிக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் முன்வைத்துள்ளோம். இதற்கமைய நாடாளுமன்றக் குழுவினர் பொருத்தமான, இணக்கமானதொரு தீர்மானத்தை எடுப்பார்கள் - என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## மேலும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டுவந்துள்ளமைக்காக சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கைக்கு நற்பெயர் காணப்படுகின்றது. எவரும் எதிர்பாராத வேகத்தில் நாம் அதைச் செய்துள்ளோம். இது தொடர்பில் அறிய பலரும் ஆர்வமாக உள்ளனர். நாட்டை மீட்டெடுத்த தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. எனவே, நிலையானதொரு பொருளாதாரத்தை ஏற்படுத்த அவருக்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்படவேண்டும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலே இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும். எனவே, உணர்வு அரசியலுக்குப் பதிலாக வேலைத்திட்டங்கள் உடைய அரசியலுக்கே ஆதரவு வழங்கப்பட வேண்டும்" - என்றார். (அ-ப-44)

## நாடாளுமன்றில்...

டுள்ளது. நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுகுறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாய்மூல விடைக்கான வினாக்களைத் தொடர்ந்து இன்று முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக் ஷ்மன் கிரியெல்ல ஆகியோரால் கூட்டாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளதாக நாடாளுமன்றத் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் சட்ட வியாக்கியானம் வழங்கும்வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள பின்னணியில், இந்தச் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44-66)

## வீதியை...

மணல்திட்டின் ஊடாகப் பயணிக்கமுடியாமல் திண்டாடி வருகின்றனர். அதேவேளை கௌதாரிமுனைப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கண்ணிவெடியகற்றல் பணிகளும் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டமையால் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அடுத்துவரும் மாதம் கௌதாரிமுனை புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா நடைபெறவுள்ளதுடன் வழமைபோல ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, குறித்த மணலை அகற்றி, பொதுமக்கள் எந்தச் சிரமமுமின்றி போக்குவரத்தை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைக்கு வராத ரயில் ஊழியர்கள்

# பயங்கரவாதத்தை ஏற்றுக்கொண்டோர்

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கடமைக்கு சமூகமளிக்காத ரயில் ஊழியர்கள் பயங்கரவாதத்தை ஏற்றுக்கொண்டவர்களாக கருதப்படுவார்கள் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுங்கம், வற், மதுவரித் திணைக்களம் என்பவற்றினூடாக வரிகளை அதிகரித்து ரயில் ஊழியர்கள் உட்பட அனைவரது சம்பளத்தையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது ரயில் ஊழியர்களை பதவி நீக்கம் செய்யும் இக்கட்டான நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-6)

**விசாவுக்கான Show money**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தித் தரப்படும்.

1%
- visit visa
- student visa
- fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.

தொடர்பு:- 075 033 6759

(CS/55565) J-1

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்**

சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு
(மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
0777 554 528

11 KG மேற்பட்ட பொதிகளுக்கு

| | | |
|---|---|---|
| UK | - | 1300/= |
| Canada | - | 2400/= |
| Australia | - | 2300/= |
| USA | - | 2400/= |
| France | - | 1990/= |
| Germany | - | 1990/= |

## பெயர் மாற்றம்

அம்பன், குடத்தனையில் (தற்காலிக முகவரி - நோர்வே) வசிக்கும் **கார்த்திகேசு சண்முகலிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **கார்த்திகேசு சண்முகநாதன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கார்த்திகேசு சண்முகநாதன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

கார்த்திகேசு சண்முகநாதன்

(CS/42804) J-1

## Room வாடகைக்கு/ கடை வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து 700m சிவன் கோவிலுக்கு முன்பாக அழகுக் கலைக்கு உகந்ததான கடையும். சிவன் பண்ணை வீதி இல. 65, களஞ்சிய அறை, அறை, வீடு ஆகியன வாடகைக்கும் மற்றும் மாணவர்களுக்கு தங்குமிட அறை வாடகைக்கும் உண்டு.

ABI HOLYDAY HOME இற்கு முன்பாக. 4 அல்லது 5 வருடங்கள் அனுபவம் வாய்ந்த Room boy தேவை. அதனுடன் தோட்டத்தை பராமரிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:-
077 863 1768, 077 727 7177

(CS/55645) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 20 . 07. 1952 மறைவு : 24 . 06 . 2023

அமரர் கணேசமூர்த்தி இராசலட்சுமி
திதி: குமார சஷ்டி

கண்களில் கண்ணீர் சொரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
என் மனதில் குடிகொண்ட கோயிலாய்
நீர் வாழ்கின்றீர்
உமது ஆத்மா சாந்தியடைய எங்கள்
குல தெய்வங்களை வேண்டுகிறேன்.

பிரிவால் துயருறும்
கணவர் - சபாரத்தினம் கணேசமூர்த்தி
கேணியடி 1 ஆம் லேன்.
கொக்குவில் மேற்கு.

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2இலட்சம்.
- தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:**

**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.**

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**077 814 7389, 077 986 5457**

(CS/904) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org